பட்டுக்கூடு விலை விவரம்

	சேலம்	ராசிபுரம்
வரத்து	: 21.70 கி.	357.30 கி.
அதிகபட்ச விலை	: ரூ.700	ரூ.782
குறைந்தபட்ச விலை	: ரூ.700	ரூ.300
சராசரி விலை	: ரூ.700	ரூ.446

அணைகளின் நீர் மட்டம் நிலவரம்

குண்டேரிப்பள்ளம்	: 18.42 அடி
பெரும்பள்ளம்	: 19.31 அடி
வரட்டுப்பள்ளம்	: 15.12 அடி

ஆடி வெள்ளிக் கிழமையையொட்டி, ஈரோடு கருங்கல்பாளையத்தில் அமைந்துள்ள ஓங்காளியம்மன் கோயிலில் வளையல் அலங்காரத்தில் அருள்பாலித்த அம்மன். (2–வது படம்) பவானி பூக்கடை பகுதியில் அமைந்துள்ள மாரியம்மன் கோயிலில் வெற்றிலை அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள்பாலித்த அம்மன். (3–வது படம்) பவானியை அடுத்த குருப்பநாயக்கன்பாளையத்தில் அமைந்துள்ள மகா மாரியம்மன் கோயிலில் காய்கறி அலங்காரத்தில் காட்சியளித்த அம்மன். (4–வது படம்) குமாரபாளையம் அனைத்து சமூக காளியம்மன் கோயிலில் சுவாமி வெள்ளிக்கவச அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள்பாலித்தார். (5–வது படம்) குமாரபாளையம் நேதாஜிநகர் சந்தோஷி அம்மன் கோயிலில் சுவாமி வெள்ளிக்கவச அலங்காரத்தில் அருள்பாலித்தார். (6–வது படம்) திருச்செங்கோடு சின்ன ஓங்காளியம்மன் சிறப்பு மலர் அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள்பாலித்தார். (7–வதுபடம்) பரிவட்ட அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள்பாலித்த சேலம் கோட்டை பெரிய மாரியம்மன். (8–வதுபடம்) மஞ்சள் கயிறு அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள்பாலித்த சேலம் அய்யந்திருமாளிகை மாரியம்மன். (கடைசி படம்) சிறப்பு அலங்காரத்தில் அருள்பாலித்த மேச்சேரி பத்ரகாளியம்மன்.

ஈரோடு ரங்கம்பாளையத்தில் உள்ள கொங்கு கல்வி நிலையம் பள்ளியில் நடைபெற்றுவரும் குறுமைய அளவிலான விளையாட்டுப் போட்டியில் பங்கேற்ற மாணவிகளுடன், பள்ளியின் தாளாளர் கே.செல்வராஜ் உள்ளிட்டோர்.

கொங்கு கல்வி நிலையம் பள்ளியில் குறு மைய அளவில் விளையாட்டு போட்டிகள்

■ ஈரோடு

ஈரோடு ரங்கம்பாளையம் கொங்கு கல்வி நிலையம் பள்ளியில் கிழக்கு குறுமைய அளவிலான குழு விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. விளையாட்டுப் போட்டியை கொங்கு கல்வி நிலையம் பள்ளி தாளாளர் கே.செல்வராஜ் தொடங்கி வைத்தார். 45 பள்ளிகளின் மாணவ, மாணவிகள் போட்டிகளில் பங்கேற்றுள்ளனர்.

மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர் சாலமன் மேற்பார்வையில் போட்டிகள் நடைபெற்றன. மாணவ, மாணவிகளின் திறனை நடுவர்கள் பார்வையிட்டனர். மாவட்ட அளவிலான உடற்பயிற்சி ஆசிரியர்கள் கலந்து கொண்டு, போட்டிகளை சிறப்பாக நடத்தி வருகின்றனர்.

சேலம் புதிய பேருந்து நிலையம் அருகே மெய்யனூர் சாலையில் ரூ.50 லட்சம் செலவில் அமைக்கப்பட்ட சுற்றுச்சூழல் பூங்கா கடந்த 5 ஆண்டுகளுக்கும் மேலாக திறக்கப்படாமல் பயனற்று கிடக்கிறது. இதனை சீரமைத்து மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து விட வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். படம்: எஸ்.குரு பிரசாத்

இலவச வீட்டுமனைப் பட்டா கோரி

மாற்றுத் திறனாளிகள் காத்திருப்பு போராட்டம்

■ மேட்டூர்

மேட்டூர் அருகே நங்கவள்ளி, வீரக்கல், பெரிய சோரகை, ஆவடத்தூர், வனவாசி உள்ளிட்ட பகுதிகளில் 100-க்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளிகள் வசிக்கின்றனர். இவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கக் கோரி 2023-ம் ஆண்டு மனு அளிக்கப்பட்டது. அதனடிப்படையில், வருவாய்த் துறையினர் இடத்தைத் தேர்வு செய்து 20 பயனாளிகளுக்கு பட்டா வழங்க நடவடிக்கை எடுத்ததாக கூறப்பட்டாலும், இதுவரை பட்டா வழங்கப்படவில்லை என குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இதுதொடர்பாக பல கட்டங்களாக போராட்டங்களை நடத்தி வந்த நிலையில், தமிழ்நாடு அனைத்து வகை மாற்றுத்திறனாளிகள் மற்றும் பாதுகாப்போர் உரிமைகளுக்கான சங்கத்தின் சார்பில், உடனடியாக இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டும் என்ற கோரிக்கையுடன் மேட்டூர் கோட்டாட்சியர் அலுவலகம் முன்பு தொடர் காத்திருப்பு போராட்டம் நடைபெற்றது.

இலவச வீட்டுமனைப் பட்டா கோரி மேட்டூர் கோட்டாட்சியர் அலுவலகம் முன்பு காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்ட மாற்றுத் திறனாளிகள்.

நங்கவள்ளிஒன்றியத்தலைவர் சுமதி தலைமை வகித்தார். மாவட்டத் தலைவர் அமலா ராணி, மாவட்டச் செயலாளர் குணசேகரன், பொருளாளர் ஜான் பெர்ணாண்டஸ், மேட்டூர் வட்டத் தலைவர் பவுல்ராஜ் உள்ளிட்ட நிர்வாகிகள் மற்றும் 100-க்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளிகள் கலந்து கொண்டனர்.

முன்னதாக, பொதுப்பணித்துறை அலுவலகத்தில் இருந்து கோட்டாட்சியர் அலுவலகம் வரை பேரணியாக வந்த அவர்கள், இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க வலியுறுத்தி கோஷங்களை எழுப்பினர். பின்னர், வருவாய்த் துறையினர் விரைவில் வீட்டுமனைப் பட்டா வழங்கநடவடிக்கைஎடுக்கப்படும் என உறுதியளித்ததைத் தொடர்ந்து, மாற்றுத்திறனாளிகள் போராட்டத்தை கைவிட்டு கலைந்து சென்றனர்.

பொதுமக்களுக்கு தொடர்ந்து 7–வது ஆண்டாக

பவானிசாகர் அணை நீர்த்தேக்க பகுதியை பார்வையிட தடை

■ ஈரோடு

ஈரோடு மாவட்டம் பவானிசாகர் அணையின் மேல் பகுதியிலுள்ள நீர்த்தேக்க பகுதியை பொதுமக்கள் பார்வையிட தொடர்ந்து 7-வது ஆண்டாக தடை விதிக்கப்பட்டுள்ளதால் மக்கள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

பவானிசாகர் அணையின் மேற்புற நீர்த்தேக்க பகுதியை பொதுமக்கள் பார்வையிட ஆண்டுதோறும் ஆடிப்பெருக்கு நாளில் மட்டும் சிறப்பு அனுமதி வழங்கப்பட்டு வந்தது. அந்த நாளில் குடும்பம் குடும்பமாக ஏராளமானோர் அணையின் மேல் பகுதிக்கு சென்று பார்வையிடுவது வழக்கம்.

கரோனா பரவல் காரணமாக கடந்த 2020 முதல் 2023-ம் ஆண்டு வரை 4 ஆண்டுகள் பொதுமக்கள் செல்ல தடை விதிக்கப்பட்டது. கரோனா கட்டுக்குள் வந்த பிறகும், 2024 மற்றும் 2025-ம் ஆண்டுகளில் ஆடிப்பெருக்கு நாளிலும் அனுமதி வழங்கப்படவில்லை.

இந்நிலையில், நடப்பாண்டு ஆடிப்பெருக்கு நாளிலாவது அணையின் மேல் பகுதிக்கு செல்ல அனுமதி கிடைக்கும் என பொதுமக்கள் எதிர்பார்த்திருந்தனர். ஆனால், இந்த ஆண்டும் தடை நீட்டிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதுகுறித்து பவானிசாகர் அணை உதவி பொறியாளர் தமிழ் பாரத் கூறுகையில், "பவானிசாகர் அணை நீர்த்தேக்க பகுதி பாதுகாக்கப்பட்ட இடமாக அரசு அறிவித்துள்ளது. அணை பாதுகாப்பு விதிமுறைகளை பின்பற்ற வேண்டியுள்ளதால், அணை மேல் பகுதிக்கு பொதுமக்கள் செல்ல அனுமதி இல்லை.

மேலும், அணை மேல் பகுதியில் உள்ள தேன் கூடுகளில் தேனீக்கள் அதிக அளவில் உள்ளதால் பாதுகாப்பு கருதி இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதே நேரத்தில் பவானிசாகர் பூங்கா வழக்கம்போல் திறந்திருக்கும்" என்றார்.

கிராவல் மண் கடத்திய 2 டிப்பர் லாரிகள் பறிமுதல்

■ ஈரோடு

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலத்தில் அனுமதியின்றி கிராவல் மண் ஏற்றி வந்த 2 டிப்பர் லாரிகளை போலீஸார் பறிமுதல் செய்து, ஓட்டுநர்கள் மீது வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

சத்தியமங்கலம்–பண்ணாரி சாலையில் உள்ள சிக்கரசம்பாளையம் நால்ரோடு பகுதியில் காவல் உதவி ஆய்வாளர் வைரகுமார் தலைமையிலான போலீஸார் வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அந்த வழியாக வந்த 2 டிப்பர் லாரிகளை நிறுத்தி சோதனை செய்தனர். சோதனையில், உரிய அனுமதியின்றி கிராவல் மண் எடுத்துச் சென்றது தெரியவந்தது. விசாரணையில், அந்த லாரிகள் சத்தியமங்கலத்தைச் சேர்ந்தவருக்குச் சொந்தமானவை என்பதும், கோபியைச் சேர்ந்த முகமது ஆசிப் (26), மயில்சாமி (30) ஆகியோர் அவற்றை ஓட்டி வந்ததும் தெரியவந்தது. மேலும், சிக்கரசம்பாளையத்தில் தனிநபருக்குச் சொந்தமான நிலத்தில் இருந்து கிராவல் மண் எடுத்துச் சென்றதாக ஓட்டுநர்கள் தெரிவித்தனர். இதையடுத்து 2 டிப்பர் லாரிகளையும் போலீஸார் பறிமுதல் செய்து, ஓட்டுநர்கள் மீது வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

ESAF ESAF SMALL FINANCE BANK

REGD. OFFICE: ESAF Bhavan, Mannuthy, Thrissur - 680 651, Kerala

தங்கநகை ஏல அறிவிப்பு

ஈஎஸ்ஏஎஃப் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் உடன் உறுதிசெய்யப்பட்ட தங்க ஆபரணங்கள் மற்றும் கீழே பட்டியலிடப்பட்டுள்ள கிளை/கள் கடன் பெறுபவர்களால் மீட்கப்படாமல், மீண்டும் மீண்டும் நினைவூபடுத்தி மற்றும் அறிவிப்புகளை கொடுத்து இருந்தாலும் கூட, கீழே கொடுக்கப்பட்டுள்ள விவரங்களின்படி ஏலம் விடப்படும் என்று சம்பந்தப்பட்ட அனைவரும் தகவலை தெரிந்துகொள்வதற்காக இதன்மூலம் இந்த அறிவிப்பு வழங்கப்படுகிறது.

ஏலம் விடப்படும் தேதி : 13-08-2026 நேரம் : 2 PM TO 5 PM

நஏலம் விடப்படும் இடம் : இ-ஏலம் மூலம்

விப்புகளை : https://egold.auctiontiger.net Contact No: 9099013705/6351896640

விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை பார்த்து மற்றும் இ-ஏலத்தின் முழு விவரங்களுடன் இ-ஏலத்திற்காக ஏலம் கேட்பவராக பதிவு செய்வதற்கு தயவுசெய்து மேலே கொடுக்கப்பட்டுள்ள தளத்திற்கு வருகைதாருங்கள்

BRANCH NAME & LOAN ACCOUNT NUMBERS

Kanjappally: 75250001826990, **Bhuvanagiri**: 75250004973220, **Batlagundu**: 75250004793318, **Dindigul**: 75250004551535, 4637054, **Sathyamangalam**: 75250004987494, **Ulundurpettai**: 75250004670400, **Gudalur**: 75250001690614, 4624478, 4877991, **Cumbum**: 75250004992154, **Thiruvarur**: 75250005031316.

மொத்த நிலுவைத் தொகையை செலுத்தி ஆபரணங்களை மீட்டெடுக்க ஆர்வமுள்ள வாடிக்கையாளர்கள், சம்பந்தப்பட்ட கிளைகளில் (ஏலம் விடும் தேதிக்கு 2 நாட்களுக்கு முன்பு) அல்லது அதற்கு முன்பு இதை செய்யலாம்.

ஏலத்தில் பங்கேற்க விரும்பும் ஏலம் கேட்பவர்கள் தங்களின் கேஒய்சி (KYC) ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும். பதிவு செய்யப்பட்ட அமைப்பு/நிறுவனத்திற்கு ஜிஎஸ்டி எண் கட்டாயமாகும். ஏலத்தில் பங்கேற்பதற்கு முன்பு ஏலம் கேட்பவர்கள் ரூ. 50,000 மொத்த தொகையை ஈஎம்டி ஆக டெப்பாசிட் செய்ய வேண்டும்.

திருச்சூர் தேதி: 01/08/2026

கையொப்பம் அங்கீகரிக்கப்பட்டு கையொப்பமிடுபவர்

UJJIVAN SMALL FINANCE BANK

பதிவு அலுவலகம்: கிரேப் கார்டன், எண்.27, 3வது A குறுக்கு, 18வது மெயின், கோரமங்கலா 6வது பிளாக், கோரமங்கலா, பெங்களூர்-560095.

இ-ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச்சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்பு நடைமுறை விதிகள் 2002 விதி எண். 8(6) & 9(1)-ன் கீழ் அசையா சொத்தின் இ-ஏல விற்பனை அறிவிப்பு.

SARFAESI சட்டம் 2002 பிரிவு 13(4) ன் கீழ் உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் தமக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி பின்வரும் சொத்துக்களை சுவாதீனம் செய்துள்ளார். கடன் நிலுவைத் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழ்க்கண்ட கடன் கணக்குகளின் அடமான சொத்துக்களை, "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் கீழ்க்கண்ட தேதியில் விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் கடன்தாரருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

வ. எண்	கடன் கணக்கு எண் / கடன்தாரர்கள் பெயர்	(i) 13-2 அறிவிப்பு தேதி & நாளது தேதிப்படி கோரிக்கையில் கோரப்பட்ட கடன்தொகை (ii) சுவாதீனம் எடுத்த தேதி	கடன் நிலுவைத்தொகை	குறைந்தபட்ச கேட்பு விலை	டேவணித் தொகை (EMD)
கிளை அலுவலகம்: வார்டு எண்.803, மருதமலை ஆண்டவர் கல்யாண மண்டபம், தரைத்தளம், 1E சேதுமடை ரோடு, ஆனைமலை, கோயம்புத்தூர், தமிழ்நாடு-642 104					
1.	1198210130000003 / 1.Mr.ஸ்ரீநிவாசராகவ் 2.Mrs.ரேவதி.S	(I) 21.12.2021 & 21.12.2021 அன்றுள்ளபடி ₹ 23,97,552/- (ரூபாய் இருபத்து மூன்று லட்சத்து தொண்ணூற்று ஏழாயிரத்து ஐநூற்று ஐம்பத்திரண்டு மட்டும்) (ii) அடையாளபூர்வ சுவாதீனம் - 20.04.2022 & நேரடி சுவாதீனம் - 11.11.2025	29.07.2026 அன்றுள்ளபடி ₹ 39,52,448.49 (ரூபாய் மூப்பத்தொன்பது லட்சத்து ஐம்பத்து இரண்டாயிரத்து நானூற்று நாற்பத்தெட்டு மற்றும் பைசா நாற்பத்து ஒன்பது மட்டும்)	₹ 40,48,000/- (ரூபாய் நாற்பது லட்சத்து நாற்பத்து எட்டாயிரம் மட்டும்)	₹ 4,04,800/- (ரூபாய் நான்கு லட்சத்து நான்காயிரத்து எண்ணூறு மட்டும்)
2.	1172210180000007 / 1.Mr.தாமோதரன்.R 2.Mrs.கோகிலா.D	(I) 24.09.2019 & 24.09.2019 அன்றுள்ளபடி ₹ 16,20,138/- (ரூபாய் பதினாறு லட்சத்து இருபதாயிரத்து நூற்று முப்பத்தெட்டு மட்டும்) (ii) அடையாளபூர்வ சுவாதீனம் - 15.03.2025 & நேரடி சுவாதீனம் - 21.01.2026	29.07.2026 அன்றுள்ளபடி ₹ 33,92,011.44 (ரூபாய் முப்பத்து மூன்று லட்சத்து தொண்ணூற்று இரண்டாயிரத்து பதினொன்று மற்றும் பைசா நாற்பத்து நான்கு மட்டும்)	₹ 15,92,000/- (ரூபாய் பதினைந்து லட்சத்து தொண்ணூற்று இரண்டாயிரம் மட்டும்)	₹ 1,59,200/- (ரூபாய் ஒரு லட்சத்து ஐம்பத்தொன்பதாயிரத்து இருநூறு மட்டும்)

சொத்து விவரம்: சேலம் மேற்கு பதிவு மாவட்டம், சூரமங்கலம் சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட புஞ்சை ஏக்கர் 3.86 தீர்வை Rs.8.2.0, மொத்தமுள்ள புஞ்சை ஏக்கர் 1.28-ல் 1/3 பங்கு பரப்பு புஞ்சை ஏக்கர் 0.48, பாகம் பிரிக்கப்பட்ட படி சர்வே எண்.251/40, **கோட்டை கல்லாங்குத்து ஜாகீர் அம்மாபாளையம், சேலம் தாலுகா, சேலம் மாவட்டம்** என்னும் முகவரியில் கிழக்கு மேற்காக வடக்கு பக்கம் 31 அடி, கிழக்கு மேற்காக தெற்கு பக்கம் 30½ அடி, வடக்கு தெற்காக கிழக்கு பக்கம் 13 அடி, மேற்கு பக்கம் 10½ அடி **ஆக மொத்த பரப்பு 361 சதுர அடி நிலம் மற்றும் தரைத்தளம் மற்றும் முதல் தளம் கொண்ட RCC தளம் போட்ட கட்டிடம்,** அதனுடன் மேற்கண்ட கட்டிடத்தின் அனைத்து பொருத்தப்பட்டுள்ளவைகள் மற்றும் அனைத்து அனுமந்தங்கள், அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: கோகிலா மற்றும் ராதாகிருஷ்ணன்-க்கு சொந்தமான சொத்திற்கு கிழக்கு, வடக்கு தெற்கு ரோட்டிற்கு மேற்கு, கண்ணன்-க்கு சொந்தமான சொத்திற்கு வடக்கு, கல்யாணசுந்தரம்-க்கு சொந்தமான சொத்திற்கு தெற்கு.

இ-ஏல தேதி மற்றும் நேரம் : 21.08.2026 காலை 11.00 மணியிலிருந்து நண்பகல் 12.00 மணி வரை

விலைக்குறிப்பிடுகளை சமர்ப்பிக்க கடைசி	சொத்தினை பார்வையிடும் தேதி & நேரம்
தேதி: 20.08.2026 அன்றோ அதற்கு முன்னரோ காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை	19.08.2026 காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை

மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ள வேண்டிய வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி :
வ.எண்.1: Mr.ராம்பிரசாத் - 95009 96689 / Mr.டிஜோ சாஜன் – 78451 92961
வ.எண்.2: Mr.சதீஷ் - 95666 66963 / Mr.டிஜோ சாஜன் – 78451 92961

இ-ஏலமானது "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.
இ-ஏலமானது உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட இ-ஏல சேவை வழங்குனரான **M/s.C1 India PVT LTD.** மூலம் நடைபெறவுள்ளது. **(தொடர்புக்கு Mr.பிரபாகரன் Mob.74182 81709)** உத்தேச விலைக்குறிப்பீட்டாளர்கள் இணையதளத்தில் உள்ள சொத்துக்களின் விவரங்களுக்கு **https://www.bankeauctions.com or https://www.ujjivansfb.in/e-auctions** பார்வையிடலாம் மற்றும் விலைக்குறிப்பீட்டில் பங்கேற்பதற்காக அவர்கள் தங்கள் பெயரை **https://www.bankeauctions.com**-ல் பதிவு செய்து பயனாளர் ID மற்றும் கடவுச்சொல்லினை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். விருப்பமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் இ-ஏலத்தின் ஆன்லைன் பயிற்சியை சேவை வழங்குனரிடருந்து பெற்றுக் கொள்ளலாம். **M/s. C1 India PVT LTD, Helpline Number's- 7291918824,25,26 support email id:- support@bankeauctions.com, Auction portal - https://www.bankeauctions.com.**
விற்பனை குறித்த விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, கடன் கொடுத்த வங்கியின் இணையதளத்தில் பார்க்கலாம்.
i.e., **https://www.ujjivansfb.in/e-auctions / https://www.bankeauctions.com**

தேதி: 01.08.2026

ஒப்பம்/-
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்

வரி விளம்பரங்கள்

பொது

பொது அறிவிப்பு

கனம் செய்யாறு கூடுதல் சார்பு நீதிமன்றம் அவர்கள் சமூகம்
I.A.No: 2 / 2026, I.A.No: 3 / 2026
அசல் வழக்கு மேல்முறையீடு எண்.12 / 2020

சுப்பிரமணி - மனுதாரர்/மேல் முறையீடுதாரர்
எதி
கோபால் (இறந்துவிட்டார்) மற்றும் **சிலர்** - எதிர்மனுதாரர்கள்/எதிர் மேல்முறையீடுதாரர்கள்

பெறுநர்:
ஆர்.5, சிவலிங்கம், வயது.45, த/பெ.கோபால்.
ஆர்.6, துரைசாமி, வயது.43, த/பெ.கோபால்.
ஆர்.7, குருசாமி, வயது.41, த/பெ.கோபால்.
ஆர்.8, மல்லிகா, வயது.40, த/பெ.கோபால்.
5 முதல் 8 நபர்கள் வசிப்பது:
N புதுக்கோட்டை,
பீமன்தாங்கனூர் கிராமம்,
நாமக்கல் வட்டம், நாமக்கல் மாவட்டம்.

என்னுடைய கட்சிக்காரரான செய்யாறு வட்டம் பெரியஏழாச்சேரி கிராமத்தில் வசிக்கும் லட்சுமணன் அவர்களின் குமாரரான சுப்பிரமணி என்பவருக்கு உங்களுக்கு எதிராகவும் மற்றும் சிலருக்கு எதிராகவும் கனம் கோர்ட்டில் மேல்முறையீடு எண்.12/2020 என்ற மேல்முறையீட்டையும் ஐ.ஏ.2/2026, ஐ.ஏ. 3/2026 என்ற மனுவை தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவில் தாங்கள் நீதிமன்றம் ஆஜராக 10.08.2026 அன்று வாய்தா போடப்பட்டு உள்ளது. அன்றைய தினம் தாங்கள் நேரடியாகவோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ காலை 10.00 மணியளவில் மேற்படி நீதிமன்றத்தில் ஆஜராகி தங்களுடைய ஆட்சேபணையை தெரியப்படுத்திக் கொள்ள வேண்டியது. தவறும் பட்சத்தில் தங்களுக்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை என்றும் தங்களுக்கு எதிராக ஒரு தலைபட்சமாக உத்தரவு பிறப்பிக்கப்படும் என்பதையும் இதன் மூலம் தெரியப்படுத்திக் கொள்கின்றனர்.

M.S.சங்கரபாண்டியன், B.Sc., B.L.,
மனுதாரர் வழக்கறிஞர் - செய்யாறு.

சென்னை எக்மோர் கூடுதல் வணிக நீதிமன்றத்தில்
(சிவில் நடைமுறைச் சட்டம், 1908-ன் Order XXXVII Rule 1 & 2 மற்றும் வணிக நீதிமன்றங்கள் சட்டம், 2015-ன் பிரிவு 2(1)(c)-இன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட சுருக்க வழக்கு)
C.O.S. எண். 198 / 2026

எம்/ஸ். Fairmacs Shipstores Pvt. Ltd.,
அதன் அங்கீகரிக்கப்பட்ட பிரதி நிதி திரு. ஜாபர் அலி மூலம்,
... வாதி

எதிராக
1. Auxus Foodtech LLP @ Bai Veetu Kalyana Biriyani,
அதன் பிரதிநிதி
திரு. பஹீம் சுலைமான்.
2. திரு. பஹீம் சுலைமான்.
3.திருமதி. நாகேந்திரன் ஹனுமா நந்தினி கிருஷ்ணா.
... எதிர்வாதிகள்

செய்தித்தாள் மூலம் வெளியிடப்படும் அறிவிப்பு

பெறுநர் :
Auxus Foodtech LLP @ Bai Veetu Kalyana Biriyani,
அதன் நிர்வாக இயக்குநர் / பங்குதாரர்
திரு. பஹீம் சுலைமான் மூலம்,
எண். 1/187, தாழம்பூர் சாலை,
நாவலூர், காஞ்சிபுரம்,
சென்னை 603103.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள வாதி, தங்களுக்கு எதிராக **சிவில் நடைமுறைச் சட்டம், 1908-ன் Order XXXVII Rule 1 & 2 மற்றும் வணிக நீதிமன்றங்கள் சட்டம், 2015-ன் பிரிவு 2(1)(c)(i)(xviii)-இன் கீழ்,** கடன் தொகையை வசூலிப்பதற்காக மேற்கண்ட வழக்கினைத் தாக்கல் செய்துள்ளார்.

நீதிமன்ற நாசர் (Nazar) மூலமாக தங்களுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டிருந்த போதிலும், வாதியின் கோரிக்கைக்கு பதிலளிப்பதற்காக மாண்புமிகு நீதிமன்றத்தில் நீங்கள் ஆஜராகத் தவறியுள்ளீர்கள்.

எனவே, **05.08.2026 அன்று காலை 10.15 மணிக்கு,** மாண்புமிகு நீதிமன்றத்தில் நீங்கள் நேரில் ஆஜராகி, வாதியின் கோரிக்கைக்கு பதிலளிக்குமாறு இதன் மூலம் அறிவிக்கப்படுகிறீர்கள்.

மேற்கண்ட தேதியில் நீங்கள் ஆஜராகத் தவறினால், சட்டத்தின்படி, உங்கள் ஆஜரின்றியே இவ்வழக்கு விசாரிக்கப்பட்டு தகுந்த தீர்ப்பு வழங்கப்படும் என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

திரு. அலய் பிராங்க்ஸ் இனிகோ லயோலா
வழக்கறிஞர்
அறை எண். 104, கத்தோலிக்க மையம்,
அர்மேனியன் தெரு,
சென்னை – 600001.

இந்து தமிழ் திசை

பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித்தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் குழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

TNPL தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம்
காகித நகர், மொண்டிப்பட்டி - 621 306. திருச்சி மாவட்டம், தமிழ்நாடு.
Ph: 04332-261600; Email: tos.u2@tnpl.co.in

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

ஒப்பந்தப்புள்ளி எண்.	பணியின் விவரம்	கடைசி நாள்
262723 001842	திருச்சி TNPL அலகு–2ல் சோடா ரிகவரி ஆலையை இயக்குபவர்களை அளித்தல்	14.08.26

பிழை திருத்தங்கள் இருப்பின் அவை NIC இணையதளத்தில் மட்டும் வெளியிடப்படும். மேலும் விபரங்களுக்கு www.tnpl.com / www.tntenders.gov.in/nicgep/app இணையதளங்களை பார்வையிடவும்.

செ.ம.தொ.இ / 2408 / ஒப்பந்தப்புள்ளி/2026

எமது பதிப்புகள்: சென்னை, புதுவை, வேலூர், கோவை, சேலம் தருமபுரி, திருச்சி, தஞ்சாவூர், மதுரை, ராமநாதபுரம், நெல்லை, திருவனந்தபுரம்

Published by Vijaya Arun on behalf of KSL MEDIA LIMITED and Printed by M Jegadesh Kumar at THG PUBLISHING PVT.LTD. 391/1 & 391/2 Kamaraj Road, Uppilipalayam, Coimbatore, Tamil Nadu 641015. Editor: V. Venkateswaran (Responsible for selection of news under the PRP Act).